# பூச்சோங் தான் யூ லாய் சாலை ஓரத்தில்

# குப்பைகள் பெருகி விட்டன




**நமது நிருபர்**

கோலாலம்பூர், ஜூலை 4–

பூச்சோங், ஜாலான் தான் யூ லாய் சாலை ஓரத்தில் குப்பைகள் பெருகி விட்டன. இவற்றை கோலாலம்பூர் மாநகர் மன்றம் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குப்பைகள் இவ்வாறு பெருகும் போது அதில் ஈக்கள் மொய்த்து மக்களுக்கு நோய்கள்தான் அதிகமாக ஏற்படும். ஆகையால் இந்த குப்பைகளை முறையாக அகற்றி இங்கு மக்கள் குப்பை போடுவதற்கு ஏதுவாக குப்பைத் தொட்டியை மாநகர் மன்றம் ஏற்படுத்த வேண்டும்.

இங்கு முறையாகக் குப்பைகளைச் சேகரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப் பட்டால் இம்மாதிரியான சூழ்நிலையை இனி தவிர்க்கலாம் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மழைக் காலமாக இருப்பதால் இதுபோன்ற குப்பைகள் மிகுந்த இடங்களில் தண்ணீர் அதிகமாகத் தேங்கிக் கிடக்கும். இதில் கொசுக்கள் பெருகி விட்டால் பிறகு டிங்கிக் காய்ச்சல் ஏற்படக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. இதற்கு மாநகர் மன்றம் முறையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு மக்களிடையே நோய் பரவலைத் தடுக்க வகை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.